


- வாழ்வோம்

சமத்துவத்தை கற்பது அவ்வளவு எளிதல்ல!

தமிழ்நாடு வாக்காளர்களின் எண்ணத்துக்கு மாறாக, த.வெ.க. நடத்திய குதிரை பேரத்தால் இன்று மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரண்டு தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெறுகிறது. `தாங்கள் தேர்ந்தெடுத்த வேட்பாளர்களே, வேறு கட்சிக்குச் சென்றதுடன் வெட்கமில்லாமல் மீண்டும் வாக்கு கேட்டு வருகின்றனர்' என மக்கள் கோபத்தில் உள்ளனர். இரண்டு தொகுதிகளிலும் பிரச்சாரம் என்கிற பெயரில், நடிகரின் நாடகம் மக்களிடம் எடுபடவில்லை. எம்.ஜி.ஆர். வேடம் போட்டு மக்களை ஏமாற்றலாம் என்கிற அளவுக்குத் தரம் தாழ்ந்தார். இது தொடர்பாக, பத்திரிகையாளர் பிரபாகர் எழுதிய குறிப்பு கவனிக்க வைக்கிறது.

``அவ்வளவு எளிதல்ல...
நீங்கள் அம்பேத்கராய் மாறுவது.
அவ்வளவு எளிதல்ல...
நீங்கள் பெரியாராய் மாறுவது.
அவ்வளவு எளிதல்ல...
நீங்கள்
அய்யன்காளியாய்
மாறுவது.
அவ்வளவு எளிதல்ல...
நீங்கள்
அண்ணாதுரையாய்
மாறுவது.
அவ்வளவு எளிதல்ல...
நீங்கள் கலைஞராக
மாறுவது.
மக்களோடு வாழ வேண்டும்.
தெருவில் இறங்கி நடக்க வேண்டும்.
பல நூறு புத்தகங்கள் வாசிக்க வேண்டும்.
பல ஆயிரம் மேடைகளில் முழங்க வேண்டும்.
பண்பாளர்களோடு பழக வேண்டும்.
பண்ணையார்களை விலக்க வேண்டும்.
பார்ப்பனியத்தை அழிக்க வேண்டும்.
சாதியத்தை எதிர்க்க வேண்டும்.
சமத்துவத்தைக் கற்க வேண்டும்.
சனாதனத்தை ஒழிக்க வேண்டும்.
ஆனால்,
நீங்கள் இதில் எதையும் செய்ய வேண்டாம்.
தொப்பியும் கண்ணாடியும்
வாங்கினால் போதும்
எம்ஜிஆர் ஆகிவிடலாம்;
மேனி மங்காமல் வாழ்ந்தும்விடலாம்" என்று பதிவிட்டுள்ளார்.
காலம் மற்றொரு எம்.ஜி.ஆரை உமிழ்ந்துவிடும்.

மீண்டெழுக திராவிட சினிமா!



கௌதம் ராஜ்

படித்தது 134

சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

பகுத்தறிவு சமூக நீதிக் கருத்துகளை, சினிமாமூலம் வெகுஜன மக்களிடம் பரப்பி, அதன் வழியாக அரசியல்தளத்தில் வெற்றி கண்ட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்.

அன்று, அரசியல் கருத்துகளைப் பரப்பும் ஊடகமாக விளங்கிய சினிமா, சமகாலத்தில் 'சந்தர்ப்பவாத நாயகர்'களின் அரசியல் நுழைவுக் கருவியாகப் பயன்பட்டுவருவது காலத்தின் கோலம். எனினும், திராவிட சினிமாவின் வேர்களையும் அதன் தொடர்ச்சியையும் நாம் பேசாமல் இருக்க முடியாது.

சினிமாவுக்கெனவும் திரைப்படம் சார்ந்த முற்போக்குக் கருத்துகளையும் சுமந்து வெளிவரும் இதழ், பரிசல் பதிப்பகத்தின் 'படப்பெட்டி'. திராவிட மாதமான செப்டம்பர் மாதச் சிறப்பிதழாக சொர்ணவேல் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'திராவிட சினிமா: அரசியல், அழகியல், அறிவியல்' என 'படப்பெட்டி' இதழை வெளியிட்டுள்ளது. கருத்துகளைக் காட்டிலும் கவர்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுவரும் இந்த நவதாராளவாத யுகத்தில், திராவிட சினிமா பற்றி வெளியாகி இருக்கும் இந்த இதழ், கவனம்பெறுகிறது.

கிட்டத்தட்ட 20 ஆய்வாளர்கள் மற்றும் ஆளுமைகளின் பங்களிப்பில், ஐந்து பெரும் பகுதிகளாக 20 தலைப்புகளின்கீழ் எழுதப்பட்ட ஆழமும் விரிவும் கொண்ட கட்டுரைகள் இச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன.

படிப்பறிவு பெரிய அளவில் இல்லாத காலத்தில், பாமர மக்கள் சினிமாவை அணுகிய விதத்திற்கும் கல்வி வளர்ச்சியும் - விழிப்பு உணர்வும் பெற்ற தற்காலத்தில் சினிமா நுகரப்படும் விதத்திற்கும் பெரிய அளவில் வித்தியாசம் இருப்பதை, இதிலுள்ள அனைத்துக் கட்டுரைகளும் தொட்டுக் காட்டுகின்றன.

இந்த நூலில் சிறப்பாசிரியர் குறிப்பிடுவதைப் போல், "ஒரு கருத்தையோ அல்லது பிம்பத்தையோ, ஏற்பதும் நிராகரிப்பதும் ஈர்ப்பு, பொருளாதாரம், அறிவியல் மற்றும் அன்றாட வாழ்வின் சலிப்புகள் கொண்ட ஒரு சிக்கலான தளத்திலிருந்தே உருவாகிறது" என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டி இருக்கிறது.

திராவிட சினிமாவைக் கடந்தகால வரலாற்றுடன் சுருக்கிப் பார்க்காமல், 'மாமன்னன்' - 'நெஞ்சுக்கு நீதி' - 'பராசக்தி' ஆகிய படங்களில் அதன் தொடர்ச்சி இருப்பதையும், அரசியல் புரிதல் கொண்ட புதிய அலை திரைப்பட இயக்குநர்கள் திராவிட சினிமா மரபை மீட்டெடுத்து - அதை நவீன தலித்திய அரசியலுடன் இணைத்து, சமத்துவக் கனவுகளை நோக்கி பயணிப்பதை ஆரோக்கியமான ஒன்றாகப் பார்க்கமுடிகிறது. இந்தத் தொகுப்பில் உள்ள மூன்று கட்டுரைகள் அதையே வலியுறுத்துகின்றன.

'திராவிட இயக்கமும் தமிழ் சினிமாவும்' என்ற தலைப்பில், கலைஞரின் வாழ்க்கை வரலாற்றாசிரியர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் வழங்கிய உரையாடல், இந்தத் தொகுப்பில் தனித்துவமான ஒன்று. இன்றைய சினிமா, சமூக ஊடகங்களின் உதவியுடன் போலியாகக் கட்டமைக்க முயலும் பிம்பங்களுக்கும் திராவிட இயக்கத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள், தங்களது படைப்பாற்றல்மூலம் சினிமாவில் தலையிட்டு, மக்களை இயக்கத்திற்காகத் தயார்படுத்தியதையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டியதன் அவசியத்தை, மிகத் துல்லியமாக அவர் சுட்டிக்காட்டுகிறார்.

கவர்ச்சித் திரைகள் நம்மைச் சூழும் கால கட்டத்தில், ஆய்வுப்புல அறிஞர்களால் திராவிட சினிமா குறித்து எழுதித் தயாரிக்கப்பட்டுள்ள இந்த சிறப்பிதழ், தவறவிடக் கூடாத ஒன்று.

சிறப்பிதழைப் பெற, பரிசல் புத்தக நிலையம், அலைபேசி: 93828-53646, 88257-67500.

...வாசிப்போம்.

இளைய தலைமுறையின் இயக்கம்!



விக்னேஷ், அரியலூர்

'ஊழலற்ற ஆட்சி நடத்துவோம்' என்று தி.மு.க., மக்களிடம் உத்தரவாதம் தந்திருக்கிறதா... என்று இடைத்தேர்தல் களத்தில் த.வெ.க. அமைச்சர்கள் பேசுகிறார்களே?

தி.மு.க., ஆறு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆட்சியில் அமர்ந்திருக்கிறது. ஒவ்வொரு ஆட்சிக்காலத்திலும் தி.மு.க. நிறைவேற்றிய திட்டங்களும், உருவாக்கிய சட்டங்களும், உள்கட்டமைப்புகளும்தான் இன்றைய தமிழ்நாட்டைக் கட்டமைத்திருக்கின்றன. அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கிய மாநிலத்தின் வளர்ச்சி என்பதுதான் தி.மு.க.வின் இலட்சியம். அனைத்துத் தரப்பினரும் முன்னேறுவதை விரும்பாதவர்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சியைச் சிதைக்க நினைப்பவர்கள் ஒன்றுசேர்ந்துகொண்டு, தி.மு.க. மீது திட்டமிட்டே ஊழல் புகார்களைச் சொல்வது வழக்கம். ஆனால், எந்த ஒரு புகாரும் சட்டபூர்வமாக நிரூபிக்கப்பட்டதேயில்லை. குறைகளைச் சரிசெய்வதுதான் சிறந்த நிர்வாகம். அதைத்தான் தி.மு.க. தனது ஆட்சிக்காலங்களில் செய்தது. 'ஊழலே செய்யாத உத்தமர்கள் போல பேசும் த.வெ.க.வினர் ஆட்சியில்... நான்கே மாதங்களில் டெண்டர் ஊழல், அரசு வழக்கறிஞர்கள் நியமனத்திற்கு இலஞ்சம், கனிம வளக் கொள்ளை' என நாறுகிறது.

மு.சந்தோஷ்குமார், சென்னை

திராவிட இயக்கத்திற்கு, அதிலும் குறிப்பாக தி.மு.கழகத்திற்கு எதிரான செய்தி என்றால் வரிந்துகட்டி வரும் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்டவர்கள், கழகத்திற்கு ஆதரவான செய்தி என்றால், நடுநிலையாளர்களாக மாறிவிடுகிறார்களே, ஏன்?

திராவிட இயக்கத்தில், குறிப்பாக தி.மு.க.வில் அண்ணா, கலைஞர் தொடங்கி முன்னோடியான தலைவர்கள் பலரும் எழுத்தாளர்கள். ஒவ்வொருவரும் ஒரு பத்திரிகையை நடத்திய ஆசிரியர்கள். பழைமையும் பிற்போக்குத்தனமுமாக இருந்த தமிழ்ச் சமுதாயத்தைப் புத்துலகச் சிந்தனைக்கேற்ப கட்டமைத்த படைப்பாளிகள். அதனால், அந்தக்கால பத்திரிகைகள் முதல் இந்தக்கால ஊடகங்கள் வரை திராவிட இயக்கத்தை எப்படி வீழ்த்தலாம் என்பதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன. பத்திரிகை நிர்வாகத்தின்கீழ் வேலைபார்க்கும் செய்தியாளர்கள், பத்திரிகையில் கதை பிரசுரமாக வேண்டும் எனத் துடிக்கும் எழுத்தாளர்கள் பலரும் தி.மு.க.வுக்கு எதிராக ஒரு சிறு துரும்பு கிடைத்தாலும் அதைத் தூணாக மாற்றுவார்கள். தி.மு.க.வுக்கு ஆதரவான செய்தி என்றால், நாம் ஏன் திராவிட இயக்கத்திற்கு விளம்பரம் தர வேண்டும் என்று முடிவுசெய்து, நடுநிலையாளர் வேடம் போட்டு மௌனமாகிவிடுவார்கள். காலந்தோறும் இப்படி வேடம் கட்டும் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் வந்துகொண்டேதான் இருக்கிறார்கள். திராவிட இயக்கம், குறிப்பாக தி.மு.க. எல்லாவற்றையும் எதிர்கொண்டு வளர்ந்தபடியேதான் இருக்கிறது.

சுதந்திரன், நெய்வேலி.

முந்தையப் பிரச்சார முறைகள் இந்தக் காலத்திற்கு சரியாக இருக்குமா? தி.மு.க.வின் பிரச்சாரங்கள் உரிய மாற்றத்தை அடைந்திருக்கின்றனவா?

தேர்தல் நேரப் பிரச்சாரம் என்ற நிலையைத் தாண்டி, ஒவ்வொரு நாளும் செல்போன்கள் மூலமான பிரச்சாரம் நடைபெறுகின்ற காலம் இது. தி.மு.க. தனது கொள்கைகளை, கருத்துகளைப் பரப்புரை செய்யவேண்டிய நேரத்தைவிட, எதிரிகளின் பொய்ப் பிரச்சாரத்திற்குப் பதிலளிக்கவேண்டிய நேரம்தான் மிக அதிகமாக உள்ளது. உதாரணத்திற்கு, சட்டமன்றத்திலேயே கழகத் தலைவரை உருவகேலி செய்யும் வகையில் சைகை செய்து, அதை நேரலையில் ஒளிபரப்பு செய்தவர், முதலமைச்சராகிவிட்ட விஜய்தான். ஆனால், கழகத் தலைவர்மீது தேர்தல் ஆணையத்திடமும் காவல் துறை இயக்குநரிடமும் புகார் அளிக்கிறது, த.வெ.க. நிர்வாகம். அதை நாள் முழுக்க செய்தியாக மாற்றவும் செய்கிறார்கள். பொய்ப் பிரச்சாரங்களை முறியடிக்க வேண்டிய அளவில், முழுமையான மாற்றங்கள் தேவைப்படும் காலம் இது. கழகத்தின் இளைய தலைமுறை அதனை உணர்ந்து செயல்படுகிறது.

திராவிட பதில்கள் 03

ஃப்ளாஷ்பேக்



நெல்லிக்குப்பம் புகழேந்தி



கழகத்தில் அலை அலையாக இளைஞர்கள்...

1994-ஆம் ஆண்டு, கழகத்தில் இருந்து சிலர் பிரிந்து சென்றதால் வீழ்ச்சி ஏற்பட்டுவிட்டது எனக் கூறப்பட்ட நேரத்தில், 'மதுரையில் மண்டல மாநாடு' நடத்தினார் தலைவர் கலைஞர். அந்த மண்டல மாநாட்டில், இளைஞர்கள் அலை அலையாகப் பங்கேற்றனர். இன்றைய கழகத் தலைவர், அண்ணன் தளபதி அவர்கள் தலைமையில், இளைஞர் அணிச் சீருடையில் பேரணி சென்றது. அன்றைய மாணவர் அணிச் செயலாளர், அண்ணன் திருச்சி சிவா அவர்கள் தலைமையில், தென்சென்னை மாவட்ட மாணவர் அணித் துணைச் செயலாளராக நானும் வடசென்னை மாவட்ட மாணவர் அணித் துணைச் செயலாளர் முன்னாள் அமைச்சர், நண்பர் கோவி.செழியனும் மாநாட்டில் மாணவர் அணிச் சீருடையில் ஊர்வலத்தில் வந்த தருணம்.

- நெல்லிக்குப்பம் புகழேந்தி,
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்,
கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளர்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900